# அருள்மிகுவெங்கடேசப் பெருமாள்திருக்கோயில்
## மொண்டிபாளையம், அவிநாசிவட்டம், திருப்பூர் மாவட்டம்.

## மறுடெண்டர் அறிவிப்பு

இத்திருக்கோயிலில் கீழ்கண்ட பணிக்கு பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 23.06.2022 வியாழக்கிழமை மதியம் 2.30 மணி வரை வரவேற்கப்படுகின்றன. மறுஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 07.06.2022 காலை 10 மணி முதல் 22.06.2022 மாலை 5.00 மணி வரை உரிய தொகை செலுத்தி திருக்கோயில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 23.06.2022 வியாழக்கிழமை மதியம் 3.00 மணி அளவில் துறைஅலுவலர்கள் முன்னிலையில் செயல்அலுவலரால் திறக்கப்படும்.

| வ. எண் | திருக்கோயில் பெயர் மற்றும் வேலை விபரம் | டேவணித் தொகை | டெண்டர் படிவ விலை | பணிகாலம் |
|---|---|---|---|---|
| 1 | நில அளவைக்கல் பதிக்கும் பணி<br><br>மதிப்பீடு ரூ.4,98,000/- | ரூ.4,980/- | ரூ.750<br>+90(12% GST) | 2 மாதம் |

**நிபந்தனைகள்**

1. ஒப்பந்தபடிவங்களை ரூ.840/- செலுத்தி திருக்கோயில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.
2. பொதுபணித்துறை மற்றும் பிற அரசுத்துறைநிறுவனங்களில் ஒப்பந்ததாராக பதிவுபெற்ற சான்று இணைக்கப்படவேண்டும்.
3. ஒப்பந்தபடிவத்தில் தனித்தனியே தொகையை (ரேட்) எண்ணாலும் எழுத்தாலும் குறிப்பிடவேண்டும். தொகைகளை அடித்தல், திருத்தல் ஏற்பட்டால் அவைகள் ஒப்பந்ததாரரால் சான்றொப்பம் செய்யப்படவேண்டும். எக்காரணம் கொண்டும் ஒப்பந்தபடிவத்தில் ஷெட்யூல், நிபந்தனைகள், வரைபடங்கள் முதலானவற்றில் ஒப்பந்ததாரர்கள் திருத்தமோ அல்லது மாற்றமோ செய்யக்கூடாது. ஒப்பந்தபடிவத்தில் ஒவ்வொரு பக்கமும் ஒப்பந்ததாரரால் கையொப்பமிடப்பட்டிருக்கவேண்டும். ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு மொத்த தொகையில் இவ்வளவு சதவீதம் கூடுதல் அல்லது குறைவுஎன குறிப்பிட்டு கொடுத்தால் அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஒப்பந்தப்புள்ளி பத்திவாரியாக விரிவாக இருக்கவேண்டும்.
4. ஒப்பந்ததாரர் ஒப்பந்தபுள்ளி கொடுக்கும் முன் வேலையின் தன்மை, இடம், வேலைக்குத் தேவையானபொருட்கள் கிடைக்கின்ற இடங்கள், ஒப்பந்தம் பற்றிய விவரங்கள், நிபந்தனைகள், வரைபடங்கள் தொடர்புடைய சட்டவிதிகள் முதலியன அனைத்தையும் முழுமையாக அறிந்த பின்னரே கொடுக்கவேண்டும். அவ்வாறு இல்லையெனில் அனைத்தையும் அறிந்து கொண்டதாக கருதப்படும்.
5. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் டெண்டர் விளம்பரத்தில் கண்டுள்ளபடி டேவணித் தொகையை "செயல்அலுவலர், அருள்மிகு வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில், மொண்டிபாளையம்" என்ற பெயரில் வங்கி வரைவோலையாக திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான இரசீதையும் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கவேண்டும். மேலும் அத்துடன் உரிய அலுவலரிடம் பெற்றவருமானவரி மற்றும் விற்பனைவரி சரிபார்த்தல் சான்றிதழ்களையும் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்படவேண்டும். வெற்றி பெற்றவர் தவிர ஏனையோரால் செலுத்தப்பட்ட டேவணித்தொகை ஒருமாதம் கழித்து திருப்பித் தரப்படும்.
6. ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் முன்பு ஒப்பந்ததாரரின் தகுதி, முன் அனுபவம், அவர் தம் பொருள் வசதி முதலியனஆராய்ந்து பின்னரே உறுதிசெய்யப்படும்.
7. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டதில் சேதமடைந்தலோ அல்லது காணாமற்போனோலோ அதற்கு நிர்வாகம் எவ்விதபொறுப்பும் ஏற்காது.
8. டேவணித் தொகைகள் வரையோலையாக செலுத்தப்படவேண்டும். கசோலைகள், போஸ்டர் ஆர்டர்கள் மற்றும் ரொக்கமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. செலுத்தப்படும் டேவணித் தொகைக்குவட்டி கிடையாது. மேற்படி தொகை வேலை முடிந்து தணிக்கை முடிந்த பின்னரே திருப்பி வழங்கப்படும்.
9. ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் உத்தரவு பெற்ற ஒருவாரகாலத்தில் ரூ.100.00 (ரூபாய் நூறு மட்டும்) மதிப்புள்ள அரசுமுத்திரைப் பத்திரத்தில் மதிப்பீட்டுத் தொகையில் 1%க்கான பிணை வைப்புத்தொகையுடன் இத்திருக்கோயில் செயல்அலுவலருக்கு மேற்படி

வேலைக்குரிய இலாகாபூர்வமான வரையறைகள் உள்ளடக்கிய ஒரு ஒப்பந்தப் பத்திரம் (அக்ரிமெண்ட்) எழுதிக் கொடுக்கவேண்டும்.

10. இத்திருக்கோயில் ஒப்பந்தபடிவங்கள் அனுமதிக்கப்படும். அங்கீகாரமற்ற படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
11. மூடி முத்திரையிடப்பட்ட உறைகள் மீது வேலையின் பெயர் மற்றும் ஒப்பந்ததாரரின் முழு அஞ்சல்முகவரியுடன் குறிப்பிடவேண்டும். ஒவ்வொரு பணிக்கு தனித்தனியே அனுப்பப்பட வேண்டும். மேலும் தனி உரையில் தனி மூடி முத்திரையிடப்பட்ட உரையில் மேல் பணியின் பெயர் குறிப்பிடப்படவேண்டும்.
12. காரணம் கூறியும் கூறாமலும் எந்த ஒப்பந்தப்புள்ளியையும் ஒப்புக்கொள்ளவோ நிராகரிக்கவோ அல்லது ஒத்திவைக்கவோ செயல்அலுவலருக்கு பூரணஉரிமை உண்டு. இதில் செயல்அலுவலரின் முடிவு இறுதியானது. டெண்டர்கள் இந்து சமயஅறநிலையத் துறை இணை ஆணையர் அங்கீகாரத்திற்கு உட்பட்டது.
13. வேலை ஒப்படைக்கப்பட்டபின் வேலை ஒப்பந்தம் வாபஸ் பெற்றுக் கொண்டால் ஒப்பந்ததாரர் டேவணித்தொகை, பிணைவைப்புத்தொகை ஆகியவற்றை இழப்பதுடன் இதனால் திருக்கோயிலுக்கு ஏற்படும் சகலநஷ்டத்திற்கும் மேற்படி ஒப்பந்ததாரரை பொறுப்பாக்கி அவரிடமிருந்து வசூலிக்கப்படும்.
14. திருக்கோயில் சொத்துக்கு சேதம் ஏற்பட்டால் அதனை ஒப்பந்தாரரே ஈடு செய்யவேண்டும்.
15. நடக்கும் வேலைகளை அறநிலையத்துறை பொறியாளர் அவர்களால் மேற்பார்வையிடப்பட்டு அளவுகள்அவ்வப்போது பதிவு செய்யப்பட்டு மேலளவுகள் பதிவு செய்தபின்னரே மதிப்பீட்டின் 5% போக மீதி பட்டுவாடா செய்யப்படும்.
16. வேலைக்கு பயன்படுத்தும் பொருட்களில் மாதிரியை முன்கூட்டியே தக்க அதிகாரியிடம் காண்பித்து அவரது ஒப்புதல் பெற்றபின்னரே அவைகளை பயன்படுத்தவேண்டும். வேலைக்கு பயன்படுத்தப்படும் பொருள்களின் தரம், அதிகாரியின் முடிவே இறுதியானது.
17. ஒப்பந்தாரர் 1959–ம் ஆண்டு தமிழ்நாடு இந்துசமய அறநிலையத்துறைசட்டம் பிரிவு 116(11)ன் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளுக்கும் ஏனைய சம்மந்தப்பட்ட சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டவராவார். மேலும் அவ்வப்போது ஆலயத்திலிருந்து பிறப்பிக்கப்படும் உத்தரவுகளுக்கும் ஒப்பந்தாரர் கட்டுப்பட்டவராவார்.
18. இதர விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தெரிந்துகொள்ளலாம்.

திரு.மா.இராமகிருஷ்ணன்,
தலைவர், பரம்பரைஅறங்காவலர்கள் குழு.

திரு.இரா.சங்கரசுந்ததேஸ்வரன்
செயல்அலுவலர்.

பரம்பரைஅறங்காவலர்கள்
திரு.தி.தேவராஜன், திரு.து.வெங்கடேசன், திரு.து.தேவராஜன், திரு.மா.தேவராஜன்,
திரு.வெ.பாபு, திரு.ரா.ஸ்ரீராம்,

நாள் :07.06.2022
இடம்: மொண்டிபாளையம்.